Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 365

சனிக்கிழமை
26 நவம்பர் 2022

கார்த்திகை 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## கூட்டத்துக்கு 3 எம்.பிக்கள் வரவில்லை

கொழும்பு, நவ. 26
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் முடிவுக்கு முரணாக மூன்று நாடாளுமன்ற 11 ➤


வடக்கு - கிழக்குப் பகுதியில்

# சமஷ்டி அடிப்படையில் உச்ச அதிகாரப்பகிர்வு

## ஜனாதிபதியிடம் வலியுறுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணி!

**யாழ்ப்பாணம், நவம்பர் 26**

**தமிழர்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்துவரும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்துவது என தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.** 11 ➤



## தலைவர் பிரபாகரன் பிறந்ததினம் இன்று!

### தமிழர் தாயகத்தில் தீவிர கெடுபிடி

யாழ்ப்பாணம், நவ. 26
விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இன்றுடன் வயது 68.
தமிழ் மக்களின் உரிமைக்காக மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரான வே.பிரபாகரன், தமிழீழத் தேசியத் தலைவராக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தவராவார்.
தலைவர் பிரபாகரனின் பிறந்ததினத்தை முன்னிட்டு தமிழர் தாயகத்திலும் இலங்கையின் இதர பகுதிகளிலும் பொலிஸாரினதும் இராணு 11 ➤

வியட்நாம் அகதிமுகாமில்

## உயிரிழந்தவரின் சடலத்தை வீட்டுக்கு கொண்டுவர உதவுக

### மனைவி உருக்கமான கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 26
வியட்நாம் அகதிகள் முகாமில் உயிரிழந்த சுந்தரலிங்கம் கிரிதரன் (வயது-37) என்பவரின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவந்து தன்னிடம் ஒப்படைக்குமாறு, உயிரிழந்த நபரின் 11 ➤



## கரைச்சி பிரதேசசபையில் மாவீரர்களுக்கு அஞ்சலிப்பு

கிளிநொச்சி, நவ. 26
கரைச்சி பிரதேசசபையின் நேற்றைய அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. 11 ➤

## கிழக்கின் மாவீரர்களையும் நினைவேந்த ஏற்பாடுகள்!

முல்லைத்தீவு, நவ. 26
முல்லைத்தீவு, தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் கிழக்கு மாகாண மாவீரர்களையும் நினைவுகூருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவீரர் தின ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.
முல்லைத்தீவு, தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் கிழக்கு மாகாணப் போராளிகளே அதிகளவில் விதைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை நினைவுகூருவதற்கு ஏற்பாடுகளை செய்துதருமாறு கிழக்கு மாகாண மாவீரர்களின் 11 ➤

## சா/த பெறுபேறுகள் நேற்று வெளியாகின

கொழும்பு, நவ. 26
2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று மாலை வெளியாகின. 10 ➤

## குருதிக் கொடைக்கு பொலிஸார் கெடுபிடி

முல்லைத்தீவு, நவ. 26
முல்லைத்தீவில் இளைஞர்கள் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளும் குருதிக்கொடை நிகழ்வுகளில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் கெடுபிடிகளை 11 ➤

கொக்குவில்

## கேணியடிப் பகுதியில் நகை, பணம் திருட்டு!

யாழ்ப்பாணம், நவ. 26
யாழ். கொக்குவில் கேணியடிப் பகுதியில் உள்ள வீடொன்றின் ஜன்னல் வழியாக தொலைபேசி மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் கேணியடிப் பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுகள் அதிகரித்து வருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன்னரும் திருட்டுச் சம்பவ 10 ➤

கொற்றாவத்தையில்

## நகை திருட்டு: ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 26
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொற்றாவத்தைப் பகுதியில் 21 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டதாக கடந்த [illegible] 11 ➤

## 40 பிடியாணைகளில் தேடிய சங்கிலித் திருடர்கள் கைது!

### அவர்கள் மீது 60 வழக்குகள் பொலிஸ் தரப்புத் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 26
60 க்கும் மேற்பட்ட வழக்குகளில் 40 பிடியாணைகள் மூலம் தேடப்பட்டுவந்த இருவர் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவால் கைது 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டித் தீர்வுதான் தமிழருக்கு சுதந்திரம்

## சி.வி.விக்னேஸ்வரன் நாடாளுமன்றில் வலியுறுத்து



**கொழும்பு, நவ. 26**

**ஒற்றையாட்சியை முடிவுக்குக் கொண்டு நியாயமான அதிகாரப் பகிர்வுடனான சமஷ்டித் தீர்வே தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்கும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009 ஆம் ஆண்டு போர் நிறைவுற்றதன் பின்னர் இராணுவத்தினருக்கான செலவு குறையும் என எதிர்பார்க்கப்பட்டாலும் ஒவ்வொரு வருடமும் அவற்றுக்காக ஒதுக்கீடு அதிகரித்தவண்ணமே போகிறது. கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட துறைகளுக்கு குறைந்தளவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்களின பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாதுகாப்புச் செலவினம் வருடாந்தம் அதிகரிப்பதானது வடக்கு, கிழக்கில் இன்னும் சமாதானம் ஏற்படவில்லை என்பதனையே காட்டுகின்றது. வடக்கு, கிழக்கில் இராணுவம் மக்களின் காணிகள், விவசாயக் காணிகளை கைப்பற்றி வைத்திருக்கின்றது. மக்களுக்கு அதிக வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் காணிகள் அதிகளவில் இராணுவத்தினர் வசமுள்ளது. மக்கள் வாழ்வாதாரம் இன்றித் தவிக்கின்றனர்.

மக்களுக்காக நல்ல வேலைத் திட்டங்களை மாகாணசபைகள் கொண்டு வந்த நிலையில் இராணுவம் காணிகளைக் கைப்பற்றி செயற்படுகின்றது.

வடக்கில் இராணுவ முகாம்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் அதிகரித்துள்ளன. வடக்கிலுள்ள மக்களின் காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. ஒற்றையாட்சி நீடித்தால் புலம்பெயர் உறவுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. வடக்கு, கிழக்கு மக்களுக்கு நீதி வழங்கவேண்டும்.

எங்களுடைய தேவைகள் எங்களுக்கு முன்னுரிமையானதாகவே இருக்குமே தவிர மத்திய அரசுக்குத் தேவையானதாக இருக்காது. ஒற்றையாட்சியை முடிவுக்கு கொண்டு வந்து நியாயமான அதிகாரப் பகிர்வை செயற்படுத்த வேண்டும். நியாயமான அதிகாரப் பகிர்வுடனான சமஷ்டி அரசமைப்பே தமிழர்களுக்கு சுதந்திரமளிக்கும் - என்றார். (ச-22)

# படையினரின் நலன்கருதியே ஆட்சியாளர்களின் செயற்பாடு

## நாடாளுமன்றில் சாள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 26

நாட்டில் இராணுவத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது. அவர்களுக்கு கட்டளையிடும் நிலையில் ஆட்சியாளர்கள் இல்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான நிதியொதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:-

நாடு வங்குரோத்துநிலை அடைந்துள்ள நிலையில் பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரச நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. நலன்புரிச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆனால் பாதுகாப்புத் துறைக்கு மாத்திரம் தற்போது அதிக நிதியொதுக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் அதிகளவான இடங்களில் தற்போது சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. போர் நிறைவுற்ற பின்னரும் வடக்கு மாகாணத்தில் பெரும்பாலான காணிகள் இராணுவத்தினர் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இராணுவத்தினர் வசமுள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை முறையாக விடுவிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-22)

# ஆட்சியாளர்களின் மனம் முழுதும் இனவாதமும் இராணுவவாதமும்தான்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 26

இனவாதமும் இராணுவவாதமும் ஆட்சியாளர்களின் மனங்களை முழுமையாக ஆக்கிரமித்துள்ளன. அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்காது படைகளை வலுப்படுத்தி அதனூடாக தங்களின் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளவே ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றின் மீதான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழர்களைக் கொலை செய்த படைகளைக் கொண்டு சிங்கள இளைஞர்களை கொலை செய்யும் வகையில் பாதுகாப்புப் படைகளுக்கு வர்த்தமானியூடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆணை வழங்கியுள்ளார். இதன்மூலம் அவர் இனவாதத்தின் வாசற்கதவைத் திறந்து விட்டுள்ளார்.

சமாதானம், நீதி, அதிகாரப் பகிர்வு ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கினால் மாத்திரமே இந்த நாடு முன்னேற்றமடையும், அதனை விடுத்து இராணுவ பலத்தை அதிகரித்துக்கொள்ள ஆட்சியாளர்கள் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டால் இந்த நாடு ஒருபோதும் உருப்படாது.

அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் படைகளை வலுப்படுத்தி அதனூடாக தங்களின் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவே முயற்சிக்கிறார்கள். இனவாதமும்,இராணுவ வாதமும் ஆட்சியாளர்களின் மனங்களை முழுமையாக ஆக்கிரமித்துள்ளன. இதனை சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார். (ச-22)

*பிள்ளை முன்பாக*

# மனைவியின் கழுத்தை அறுத்து கொலை செய்த கணவன்

கொழும்பு, நவ. 26

மனைவியின் கழுத்தை அறுத்துக் கணவர் கொலை செய்த கொடூர சம்பவமொன்று குருநாகல் பொல்பித்திகம, தல்பத்வெவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

பிள்ளையைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மனைவியை, வழிமறித்து கழுத்தை அறுத்து விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவத்தில் .பலத்த காயமடைந்த மனைவி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கணவன், மனைவி இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் நடந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சந்தேகநபர் தப்பித்துச்சென்ற நிலையில் அவரைக் கண்டறிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ-14,இ)

# முப்படையினரும் விரைவில் போராட்டத்தில் இறங்குவர்!

## சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 26

வெகுவிரைவில் முப்படையினரும் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள். இராணுவத்தினரும் தற்போது பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"இனி போராட்டத்தில் ஈடுபட்டால் இராணுவத்தை கொண்டு போராட்டத்தை அடக்குவேன்" என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இலங்கை சிவில் பிரஜைகள் தான் இராணுவத்திலும் பாதுகாப்புத் தரப்பிலும் சேவையாற்றுகிறார்கள் என்பதை ஜனாதிபதி தெரிந்து கொள்ளவேண்டும்.

வெகுவிரைவில் முப்படையினரும் போராட்டத்தில் குதிப்பார்கள். ஆகவே போராட்டத்தை முடக்குவது குறித்து அவதானம் செலுத்துவதை விடுத்து பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண ஜனாதிபதி அவதானம் செலுத்த வேண்டும். அதற்கு கட்சி என்ற ரீதியில் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார்.(ச-22)

# ஓமான் செல்வதற்கு முயன்ற யாழ்ப்பாண பெண்கள் கைது



கொழும்பு, நவ. 26

போலியான பதிவு முத்திரைகளைப் பயன்படுத்தி ஓமான் நாட்டுக்குச் செல்ல முயற்சித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கட்டுநாயக்க விமான நிலைய பிரிவின் அதிகாரிகளால் அவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யும் போது குறித்த பெண்களின் கடவுச்சீட்டில் ஒட்டப்பட்ட பாதுகாப்பு முத்திரை பொய்யாக பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என பணியகம் தெரிவித்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசாரணைப் பிரிவினிடம் இருவரும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மண் குதிரையை நம்பி....

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்காண்பதற்கான சர்வகட்சி பேச்சுத் தொடர்பில் தமிழ்த் தரப்புக்கள் தொடர்ச்சியாக சந்தேகங்களை வெளியிட்டு வருகின்றன. வரலாறு முழுவதிலும் பௌத்த – சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் நம்பவைக்கப்பட்டு கழுத்தறுக்கப்பட்டதன் விளைவாகவே தமிழ்த் தரப்புக்களால் ரணிலின் இந்த முயற்சி மீதும் நம்பிக்கை வைக்க முடியாமல் இருக்கின்றது. தீர்வை நோக்கிய பேச்சுக்கான நம்பிக்கையையே உருவாக்க முடியாத ரணில் விக்கிரமசிங்கவால் எப்படி அடுத்த சுதந்திரதினத்துக்குள் இதனை நிறைவேற்றமுடியும் என்பது கேள்விக்குறியே. இதனாலேயே மண்குதிரையை நம்பி எப்படி திரும்பவும் ஆற்றுக்குள் இறங்கமுடியும் என்று தமிழ் மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் சந்தேகிக்கின்றனர். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் எதிர்வரும் சுதந்திரதினத்துக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணவேண்டும் என்கின்ற அரசியல் விருப்பு ரணில் விக்கிரமசிங்கவிடம் உளமார இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது எழுந்துள்ள நெருக்கடிக்கு வழமைபோன்று பேச்சு என்கின்ற நாடகத்தை அரங்கேற்றி, சர்வதேசத்தைச் சமாளிக்க முயல்வதாகவே அவரது நகர்வுகள் உள்ளன.

நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது, பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்காமல்– இந்த நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் முடிவடையாமல் – அதனைக் கலைக்கமாட்டேன் என்று குறிப்பிட்டிருந்தார். சிங்கள– பௌத்த பேரினவாதத்தை முதலீடாக வைத்து கடந்த 2020ஆம் ஆண்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ராஜபக்சக்களை ஆட்சியில் அமர்த்திய இந்த நாடாளுமன்றத்தை வைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியுமா? என்பது பிரதான கேள்வி. ஆயினும் 13ஆம் திருத்தத்துக்கும் அதிகமான விடயங்களை உள்ளடக்கிய தீர்வைத் தருவதற்கு தமது கட்சி சம்மதம் என்று மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றில் எழுந்துநின்று உறுதிசெய்திருக்கிறார். அப்படி '13 பிளஸ்' தீர்வை வழங்கப் போவதாக 2009ஆம் ஆண்டில் இருந்து இதே மஹிந்த சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார். அப்போது அவர் சொன்னதை அப்படியே கேட்கக்கூடியளவுக்கு சிங்கள மக்களின் செல்வாக்கும் மஹிந்தவுக்கு இருந்தது. ஏனெனில் எவராலும் முடிக்கமுடியாத உள்நாட்டுப் போரை முடித்து வைத்த முடிக்குரியவராயிற்றே. தமிழர்களுக்கு மஹிந்த தமிழீழத்தை வழங்கியிருந்தால்கூட அப்போதிருந்த போர்வெற்றியின் உற்சாகத்தில், சிங்கள மக்கள் எதிர்த்திருக்கமாட்டார்கள். அந்தளவுக்கு மஹிந்தவையும், ராஜபக்ச குடும்பத்தையும் கண்மூடித்தனமாக, கடவுளுக்கு நிகரான போர்வெற்றி நாயகர்களாகக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். ஆனால், மஹிந்த அந்தச் சந்தர்ப்பத்தில் தீர்வை வழங்க நினைக்கவில்லை. வாய்நிறைய '13 பிளஸ்' பற்றிச் சொல்லியபடியே காலத்தைக் கடத்திவிட்டு, இப்போது மக்களால் விரட்டப்பட்ட 'அவமானத்துக்குரிய முன்னாள் பிரதமராக' இருக்கும் தருணத்தில் பழையபடி '13பிளஸ்' பல்லவியைப் பாடும் மஹிந்த தமிழ் மக்களுக்கு தீர்வைத் தர ஒத்துழைப்பார் என எவர் நம்புவார்?

தமிழர் தரப்பை பொறுத்த வரையில் சமஷ்டி அடிப்படையிலான – ஒற்றையாட்சி அரசமைப்பை தாண்டிய தீர்வு ஒன்றையே எதிர்பார்க்கின்றனர். ஆனால், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற பெரும்பான்மையான தரப்புக்கள் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வையே வழங்க முடியும் என்று ஒற்றைக்காலில் நிற்கின்றன. ஆளும் தரப்பு மாத்திரமல்லாது பிரதான எதிர்த்தரப்பான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாஸ கூட 'ஒற்றையாட்சிக்கு உட்பட்ட – அதிகாரம் எதுவுமற்ற – 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவே ஆதரவு வழங்குவேன்' என்கிறார். தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ள முடியாத அல்லது தமிழர் தரப்பும் கோருகின்ற ஒன்றை வழங்காத நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு ரணில் விக்கிரமசிங்கவால் எப்படித் தீர்வை வழங்க முடியும்? எனவே தமிழர் தரப்பு ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுத் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும். ரணில் விக்கிரமசிங்கவை தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம், 'குள்ளநரி' என்று விளித்திருந்தார். அது முற்றிலும் உண்மை. பலமாக இருப்பவர்களைப் பலவீனப்படுத்தும் கைங்கரியம் தெரிந்தவர் ரணில் விக்கிரமசிங்க. தமிழர் தரப்பையும், புலிகளையும் கடந்த காலங்களில் பலவீனப்படுத்தியதன் சூத்திரதாரி அவர்தான். இப்போது அவர் விரித்துள்ள வலையில் தமிழர் தரப்புக்கள் சிக்காமல், தீர்வுக்கான வழிகளைக் கண்டறிவதே இப்போதுள்ள பெரும் சவால்.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022



"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக் கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்'

– வங்காரி மாதாய்( கென்யாவின் பசுமைப் போராளி)




# இனப்பிரச்சினைக்கு தீர்வென இரட்டைவேடத்தில் ஜனாதிபதி

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 26**



**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண கலந்துரையாட வருமாறு அழைப்பு விடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுபுறம் வடக்கு தமிழர்களின் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமிக்க இடமளித்து வருகின்றார். இது அவரது இரட்டைவேடத்தை அப்பட்டமாக புடம்போட்டு காட்டுகிறது.**

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் மொத்த இராணுவத்தினரது எண்ணிக்கையில் அதிகளவானோர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்த பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரது செயற்பாடுகள் எல்லை கடந்து செல்கின்றன. காணி ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன. பாதுகாப்பு அமைச்சு என்பது தமிழ் மக்களுக்கு ஒரு சாபம்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுக்கு ஜனாதிபதி ஒருபுறம் அழைப்பு விடுத்து விட்டு, மறுபுறம் தமிழர்களின் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமிக்க இடமளிக்கின்றார். இதுவே உண்மை.

அரசாங்கம் இனவாதத்தை விடுத்து செயற்படும் வரை நாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது. நாட்டு மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்யவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கைப்பொம்மையே ரணில்.

காலிமுகத்திடலில் தோற்றம் பெற்ற போராட்டம் வன்முறையற்றது. ஜனநாயகப் போராட்டத்தை எவ்வாறு பயங்கரவாத போராட்டம் என்று குறிப்பிட முடியும்? ஆகவே போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் பாதுகாப்பை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்–என்றார். (ச–22)

## பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு நிறைவேறியது

2023ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு அமைச்சுக்கான நிதியொதுக்கீடு 81 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதியொடுக்கீடு தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வாக்கெடுப்பைக் கோரினார்.

வாக்கெடுப்பில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 91 வாக்குகளும், எதிராக 10 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 123 பேர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

ஆதரவாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், துமிந்த திஸாநாயக்க, ஜோன் செனவிரட்ன மற்றும் தேசிய காங்கிரஸ் தலைவரான அதாவுல்லா ஆகியோர் வாக்களித்தனர். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி ஆகியவை வாக்களிப்பில் பங்கேற்காது வெளிநடப்பு செய்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக 10 பேர் எதிராக வாக்களித்தனர். (ச–22)

**நாளை** 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை 11

சுபநேரம் : 09.12 – 10.42

ராகுகாலம்: 04.42 – 06.12

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடியைத் தடுக்க விசாரணை ஆணைக்குழு!

## நீதியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 26**

**அரசாங்கத் துறைகளில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகள் மாத்திரமன்றி தனியார் துறைகள், விளையாட்டுத்துறை ஆகியவற்றிலும் இடம்பெறுகின்ற லஞ்ச ஊழல் மோசடிகளை தடுக்க ஊழல் எதிர்ப்பு உத்தேச சட்டவரைபினூடாக ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

'லஞ்சம், ஊழல் மற்றும் மோசடியைத் தடுப்பதற்கு உரிய நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கி அதற்குத் தேவையான அதிகாரத்தை வழங்கும் பொறிமுறையை உருவாக்கத் தவறியமையாலேயே நாட்டில் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் தலைவிரித்தாடுகின்றன' என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கென உருவாக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு குறித்த உத்தேச சட்டவரைவு குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன விளக்கம் எிக்கையில், இந்த ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு, நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக்கூடியதாக இருப்பதுடன் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தனது முன்னேற்றம் குறித்த அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும்.

இலஞ்ச ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுபவர்களுக்கு எதிரான கடுமையான தண்டனைகள் குறித்தும் இந்தச் சட்டவரைவில் வலியுறுத்தப்பட்டுள்ளது - என்றார்.

இந்த உத்தேச சட்டவரைவு குறித்து ஜனநாயக ரீதியில் கலந்துரையாடல்களை நடத்தி உரிய திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச குறிப்பிட்டார். (ச-இ)



## பரிசில் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 26

சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் பொது நூலகத்தில் கடந்த மாதம் நடத்தப்பட்ட தேசிய வாசிப்புமாத நிகழ்வுகளின் பரிசில்கள் வழங்கல் கடந்த திங்கட்கிழமை திருநாவுக்கரசு ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்றது. சபையின் தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் யோ.ஜெயக்குமார் கலந்து கொண்டார்.

கச்சாய் பொதுநூலக எல்லைக்குட்பட்ட இலக்கிய எழுத்தாளர்கள் மூவர் நிகழ்வின்போது மதிப்பளிக்கப்பட்டனர். (ச-9)



## சுதந்திர தினத்தையொட்டி யாழில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/81 பிரிவிலுள்ள கொட்டி மீனாட்சிபுரம் கிராமத்தில் யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்புரையின்கீழ் கடந்த சனிக்கிழமை இந்த வேலைத்திட்டம் இடம்பெற்றது. இதன்போது இராணுவத்தினர், பொலிஸார், யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் மற்றும் அந்தப்பகுதி மக்கள் உள்ளிட்டோர் பங்கேற்று துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். நுளம்பு பரவுவதற்கு ஏதுவாக வீதிகளில் காணப்பட்ட புற்கள், நீரேந்து பொருள்கள், குப்பைகள் ஆகியவை இதன்போது அகற்றப்பட்டன. (ச-20)



## ஈச்சங்குள துயிலுமில்லம் அருகே சிரமதானப்பணி

வவுனியா, நவ. 26

வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தை அண்மித்த பகுதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை சிரமதானம் மூலம் மக்களால் துப்புரவாக்கப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தச் சிரமதானப் பணி இடம்பெற்றது.

வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவ முகாமுக்கு அருகேயுள்ள காணியை துப்புரவு செய்து மாவீரர்களை நினைவேந்தி மக்கள் அஞ்சலித்தனர். (ச-110)

## எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 26

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 'எழுத்தாளர் ஊக்குவிப்பு வட்டம்' உருவாக்கப்படவுள்ளது.

இதற்கென எழுத்துத்துறையில் ஈடுபட்டுவரும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வியமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் என பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச)

## வலி.தெற்கு பிரதேசசபையில் மாவீரருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 26

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையில் நேற்று புதன்கிழமை மாவீரர்கள் நினைவுகூரப்பட்டனர்.

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தமிழர்களின் விடிவுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூருதல் அவசியம் என தவிசாளர் தெரிவித்தார்.

அதனையடுத்து உயிரிழந்த உறவுகளுக்காக இரண்டு நிமிடம் அகவணக்கம் செலுத்திய சபை உறுப்பினர்கள் மாவீரர்களை நினைவுகூர்ந்தனர். (ச-125)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீண்டநாள் முயற்சி ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும். பணியிடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உறவினரால் உதவி உண்டாகும்.

**இடபம்:** பகைவர் தொல்லை அகலும். வியாபாரத்தில் இருந்த பிரச்சினையை சரி செய்வீர்கள். உங்கள் அணுகுமுறையால் ஆதாயம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தடைகளை சரி செய்து வெற்றி அடைவீர்கள் உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். தொழிலில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்:** உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**சிம்மம்:** குழப்பத்துக்கு இடமளிக்காதீர். திட்டமிட்ட செயல்கள் வெற்றியாகும். வேலைப்பளு அதிகரிக்கும். பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும். நிதிநிலை உயரும்.

**கன்னி:** பணத் தட்டுப்பாட்டின் காரணமாக முயற்சி இழுபறியாகும். சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். தொழிலில் எதிர்பார்த்த லாபம் காண முடியாமல் போகும்.

**துலாம்:** எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும். பணியாளர்களுக்கு புதிய பொறுப்பு வந்து சேரும். செல்வாக்கு உயரும். ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**தனுசு:** திட்டமிட்டு செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு உயரும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும்.

**மகரம்:** செயல்களில் நெருக்கடி உண்டாகும். உதவி புரிவதாக சொன்னவர்களை சந்திக்க முடியாமல் போகும். சந்திராஷ்டமம் இருப்பதால் முயற்சி இழுபறியாகும்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். உங்கள் திறமையால் எண்ணியதை அடைவீர்கள்.

**மீனம்:** பணியில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். உங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். நெருக்கடி விலகும். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தொண்டைமானாறு வீதியில் இறந்த நிலையில் முதலை

யாழ்ப்பாணம், நவ. 26

அச்சுவேலியில் இருந்து தொண்டைமானாறு செல்லும் வீதியில் முதலை ஒன்று உயிரிழந்த நிலையில் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

உயிரிழந்த முதலையை அகற்றுவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தொண்டைமானாறு ஏரியில் முதலை காணப்படுகின்றது என்று ஏற்கனவே பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-14,27)

## தும்மிந்தவுக்கு பொதுமன்னிப்பு; கோத்தாபய விளக்கமளிக்குக

### உயர்நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு, நவ. 26

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு உயர்நீதிமன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மரண தண்டனையை உயர்நீதிமன்றத்தின் ஐவரடங்கிய நீதியரசர் குழாமும் ஏகமனதாக அங்கீகரித்திருந்தது.

இந்தநிலையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் ஊடாக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த ஆண்டு அவரை விடுவித்தார்.

இந்நிலையில் கோத்தாபய ராஜபக்ச மேற்கொண்ட தீர்மானத்தை ஆட்சேபனைக்கு உட்படுத்தி பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி, மகள் மற்றும் சட்டத்தரணி ஆகியோரால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பான அடிப்படை உரிமை மனு யசந்த கோதாகொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்குமாறு கோத்தாபய ராஜபக்சவுக்கு அறிவித்தல் அனுப்புவதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன் மனு தொடர்பான மேலதிக விசாரணைகளை எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதிக்கு நீதிமன்று ஒத்திவைத்தது. (ச-இ)

### மாந்தை கிழக்கில்

# போஷாக்குக் குறைவால் 106 பிள்ளைகள் பாதிப்பு

முல்லைத்தீவு, நவ. 26

**மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் போஷாக்குக் குறைவால் 106 பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ந.ரஞ்சனாவின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தலைமையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான ஒருங்கிணைந்த பொறிமுறையின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் கொல்லவிளாங்குளம் பொது நோக்கு மண்டபத்திலும், நட்டாங்கண்டல் கிராமஅலுவலர் அலுவலகத்திலும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தற்போது நாட்டில் நிலவிவரும் பொருளாதார பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது, சத்துணவைப் பெற்றுக்கொடுக்கும் வழிமுறைகள், வறுமையிலும் பட்டினியாலும் வாடும் குடும்பங்களை மீட்டெடுப்பது, சிறுவர்களின் போஷாக்கு, பாடசாலை இடைவிலகலைத் தவிர்த்தல் போன்ற முக்கியமான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இரு பகுதிகளிலும் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில், ஐந்து வயதுக்குட்பட்ட 106 பிள்ளைகள் போஷாக்கு குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 213 குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை சந்தித்துள்ளன என்றும் 36 கர்ப்பிணித் தாய்மார்கள் பொருண்மியம் நலிவடைந்துள்ளனர் என்றும் இனங்காணப்பட்டது.

கலந்துரையாடலில் மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரும் மாவட்ட உலக உணவுத்திட்ட பொறுப்பதிகாரியுமான க.ஜெயபவாணி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் யாமினி சசீலன், பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்டதுறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர். (ஓ-14,19)



## இலவச சிங்கள வகுப்புகள்

வட்டுக்கோட்டை, நவ. 26

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இலவச சிங்கள வகுப்புகள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

உதயவாழ்வு, சரவணபவன் அறக்கட்டளை மற்றும் சூரியா கற்கை நிறுவகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து முன்னெடுக்கும் இலவச வகுப்புகள், கடந்த 4 வருடங்களாக வட்டுக்கோட்டைப் பிரதேச இளைஞர், யுவதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி இடம்பெற்று வருகிறது. அந்த வகையில் இந்த முறை 40 மாணவர்கள் அனுமதி பெற்று கற்கைநெறியைத் தொடங்கவுள்ளனர்.

வகுப்பின் ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், சூரியா கற்கை நிறுவகத்தின் ஆசிரியர், சூரியா கற்கை நிறுவகத்தின் வட்டுக்கோட்டை இணைப்பாளர், வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ஜோன் ஜிப்பிரிக்கோ ஆகியோர் கலந்துகொண்டனர். (ஓ-14,125)

## கசிப்புடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 26

மாதகல் பகுதியில் 40 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 40 மற்றும் 42 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஓ-14,23)

# அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் திருக்கேதீச்சர மனித எச்சம் பகுப்பாய்வு

## மன்னார் நீதிமன்றம் அனுமதி

மன்னார், நவ. 26

மன்னார் திருக்கேதீச்சர மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களின் பகுதியை பிரித்தெடுத்து அமெரிக்கா புளோரிடா நிறுவனத்துக்கு காபன் பரிசோதனைக்காக அனுப்புவதற்கான பகுப்பாய்வை அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் மேற்பார்வை செய்து மன்னார் நீதிமன்றுக்கு பாரப்படுத்த மன்னார் நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் அப்துல் சமட் கிப்துல்லா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் அரசு தரப்பு சார்பாக சமந்த விக்கிரமசிங்க, மனிதப் புதைகுழி அகழ்வுக்கு தலைமைதாங்கி ஈடுபட்ட சட்ட மருத்துவ அதிகாரி வைத்தியரத்தின மற்றும் ஹேவகே ஆகியோருடன் கொழும்பிலிருந்து வருகை தந்த குற்ற புலனாய்வுப் பிரிவினரும் மன்றில் முன்னிலையாகினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக சட்டத்தரணி [illegible] சிரேஷ்ட சட்டத்தரணி [illegible] ஆகியோர் முன்னிலையாகினர்.

இதுதொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன் தெரிவிக்கையில்,

இந்தப் புதைகுழியிலிருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எச்சங்கள் அனுராதபுர மருத்துவமனையில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதன் எச்சங்களின் மாதிரிகளை பிரித்தெடுத்து காபன் பரிசோதனைக்கு அமெரிக்கா புளோரிடா நிறுவனத்துக்கு அனுப்பப்படவுள்ளது.

குறித்த மனித எச்சங்களின் பிரித்தெடுப்பு நடவடிக்கை மன்னார் நீதிமன்ற எல்லைக்குள்ளேயே இடம்பெறவேண்டும் என்றும் இதற்கு வழக்குத் தொடு[illegible] மருத்துவ கலாநிதிகளுக்கு அசௌகரியம் ஏற்பட்டால் அதற்கான நடவடிக்கை எடுத்து அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் மனித எச்சங்களை பகுப்பாய்வுக்கு பிரித்தெடுக்குமாறும் கடந்த செப்ரெம்பர் மாதம் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இதற்கான அனும்தியை மன்னார் நீதிமன்றம் வழங்கியது.

இதற்கு அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் அரச தரப்பு சட்டத்தரணிகளால் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி சமர்ப்பணம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேலும் இந்த வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதிக்கு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்று ஒத்திவைத்தது - என்றார். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தனித்திருந்தவேளை வீட்டினுள் நுழைந்து அட்டூழியம்

## சாவகச்சேரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 26
கைதடி மேற்கு பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பலொன்று வீட்டின் யன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியதுடன் கைக்கோடரியால் கதவுகளையும் கொத்தி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது என பாதிக்கப்பட்டோரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
வீட்டில் தாயாரும் மகளும் தனித்திருந்தவேளையே வீட்டினுள் நுழைந்த குறித்த கும்பல் இவ்வாறு அட்டூழியம் புரிந்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளது என முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது
சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-288)

# மாதிரி மரச்சோலைத் திட்டம் சாவகச்சேரியில் ஆரம்பம்

சாவகச்சேரி, நவ. 26
சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மாதிரி மரச்சோலைத் திட்டம், சாவகச்சேரி பெருங்குளம் கள் விற்பனை நிலையத்துக்கு முன்பாக உள்ள காணியில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.
சங்கத்தின் தலைவர் சி.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் கலந்துகொண்டு மாதிரி மரச்சோலைத் திட்டத்தின் மர நடுகையை ஆரம்பித்து வைத்தார். (ஒ-14,9)




# கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 12.12.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பிரதான உணவகம் - I | திருநெல்வேலி |
|---|---|
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட உணவகம் | கலாசாலை வீதி, திருநெல்வேலி. |
| மருத்துவ பீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| சேர்.பொன்.இராமநாதன் அவைகாற்று மற்றும் காண்பிய பீட உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| சித்த மருத்துவ அலகு உணவகம் | கைதடி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/- இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000006000268 இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/- இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் **97000006000276** இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 0212226716) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
**25.11.2022** (CR 38545) (3/6) **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



# படவரைஞர்களைப் பதிவு செய்தல் 2023

யாழ் மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள், மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் NVQ- 5 சான்றிதழுடன் எதிர்வரும் **01.12.2022** தொடக்கம் **30.12.2022** ஆம் திகதி மதியம் **12.00** மணிக்கு முன்னர் **2300.00** (2000.00+Vat 15%) ரூபாவினை திட்டமிடற் கிளையில் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குறிப்பு**
1. NVQ 5 சான்றிதழ் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
2. மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

**முதல்வர்,**
(IN 18261)(3/6) **யாழ். மாநகரசபை.**


# மரண அறிவித்தல்



## திரு.வேலுப்பிள்ளை வேலாயுதபிள்ளை

கச்சாய் தெற்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை வேலாயுதபிள்ளை கடந்த (24.11.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் மைத்துனரும், திலகரட்ணம் (இத்தாலி), தில்லைநாயகி, செல்வரட்ணம் (சுவிஸ்), அரியரட்ணம் (சுவிஸ்), நவரட்ணம் (ஜேர்மனி), வசந்தநாயகி (வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், புஸ்பலதா (இத்தாலி), காலஞ்சென்ற குமாரசாமி (குட்டி), ரஞ்சிதமலர், மதிவதனி (சுவிஸ்), அகிலா (ஜேர்மனி), துஷ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுஷன் (இத்தாலி), ஜெய்சிகா (இத்தாலி), மாதினி (இத்தாலி), சுவிந்தன் (இத்தாலி), திலீபன் (சக்தி மைக்றோ), பூர்வஜா (மருத்துவ மாது), தினேஸ் (லண்டன்), மிதுனா (லண்டன்), காலஞ்சென்ற திவாகரன், திலக்ஷனன், குகப்பிரிஜா, நிதர்ஷன் (ஜேர்மனி), நிஷாந்தன், சசிரேகா, நிதர்ஷனா, அபிராமி (சுவிஸ்), அச்சுனா (சுவிஸ்), அரிகணன் (சுவிஸ்), அம்பிகன் (ஜேர்மனி), அஜனிகா (ஜேர்மனி), அதிஷயன் (ஜேர்மனி), பாதுர்ஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், உதித், உத்ரா, ஆதிஸ் (லண்டன்), அனித் (லண்டன்), ஆருஷ் (லண்டன்), றகீஷ், ஆருஷி, அஸ்மிதா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு : துஷ்யந்தன் 077 561 7562**
**திலீபன் 077 610 2609**
**கச்சாய் தெற்கு, கொடிகாமம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CR 38546)

# மரண அறிவித்தல்



## வயிரமுத்து குணராசா

**(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - பிரதேச செயலகம், கரவெட்டி)**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொடிகாமம் வீதி, துன்னாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட வயிரமுத்து குணராசா அவர்கள் நேற்று (25.11.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரமுத்து - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரபாகரன் (ஆசிரியர்), ஜயந்தன் (பொறியியலாளர்), கஜந்தன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), பிரிந்தன் (பொறியியலாளர்), தர்சன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகலிங்கம், மகேஸ்வரி, காலஞ்சென்ற சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், உஷாநந்தினி (ஆசிரியர்), லோகிதா (ஆசிரியர்), நிஷாந்தி, அஜிந்தினி ஆகியோரின் மாமனாரும், லக்ஷயா, பிரதிஷா, அக்ஷயன், ஹன்சயா, தாரிகன், கேஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 16/2, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு, நாளை (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible]ாகரன் - 076 708 1543**
**கு.கஜந்தன் - 077 300 2189**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CS 21979) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

முல்லைத்தீவு, நவ. 26

முள்ளியவளை பிரதேசத்துக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோரை மதிப்பளிக்கும் நிகழ்வு, முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் கடந்த புதன்கிழமை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்னால் இருந்து மாவீரர்களின் பெற்றோர், மங்கல வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டு நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் முன்னாள் போராளி ஒருவரால் பொதுச்சுடர் ஏற்றி நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர், மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கு சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். அதன்பின்னர் 150 க்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிக்கப்பட்டனர். (ஓ-14,19)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 26

மீசாலை தெற்கு மதுவன் சன சமூக நிலைய பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது நடப்பு வருட நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

அதில் தலைவராக செ.சிரஞ்சீவி, உப தலைவராக நா. சரவணமுத்து, செயலாளராக இ.கவி சன், உதவிச் செயலாளராக க.யோகேந்திரராஜ், பொருளாளராக த.சாருஜன் ஆகியோருடன் ஏழு பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-14,9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் நவ. 26

வட இலங்கை சமாதான நீதிவான் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ-14, 9)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவர் கைதானார்!

யாழ்ப்பாணம், நவ. 26

வெளி மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த டிப்பர் சாரதி கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தூர் வீரவாணிப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை சிவில் உடையில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார், அவ்வழியாக வந்த டிப்பரை வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன்போதே அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. (ஓ-14,23)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி சந்திரகுமார் கிரிஜா**
அவர்களின் அன்புத் தாய்

**கந்தசாமி சிறோன்மணி**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.47843) (2.7) A

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு. பேரின்பநாயகம் உபேந்திரன்**
அவர்களின் அன்புத் தந்தை

**ஆறுமுகம் பேரின்பநாயகம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.47843) (2.7)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு. தங்கராசா தணிகைக்குமரன்**
அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்துரை தங்கராசா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.47843) (2.7) B

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 . 05 . 1937



உதிர்வு 06 . 12 . 2021

**கணபதிப்பிள்ளை சிவபாக்கியம்**

திதி : கார்த்திகை மாத வளர்பிறை திருதியை (26.11.2022)

ஆண்டு ஒன்றென்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆறாது எம் துயரம்
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
இன்று வரை உங்கள் நினைவுகள் நிழலாடுகின்றன.
உண்மை தானா இதுவென்று - எம்
உள்ளுணர்வு மறுக்கிறது.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்

**என்றும் உங்கள் நினைவுகளுடன் :**
**மகள் (சிவராஜேஸ்வரி), மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்**

(CS 1213) (3/6)

## இருபத்தைந்தில் இதய சங்கமம்

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"



தோற்றம் 22.09.1934 | மறைவு 26.11.1997

**அமரர் அலோசியஸ் பஸ்ரியாம்பிள்ளை**

(ஓய்வுநிலை இயன்மருத்துவர், யாழ். போதனா வைத்தியசாலை)

தந்தையின் இலக்கணத்தில்
தரமாகத் தடம் தொடுத்து
பன்னெடுங்காலம் இயன்மருத்துவத்தில்
பலருக்கும் இயல்பான உருக்கொடுத்து
மருத்துவக் கிளையாக நாம் விழுதெறிவதில்
மனங்கொண்ட பணியதால் நிலையெடுத்து
நிலையற்ற வாழ்வில் நிலைத்த புகழ் பதித்தீர்
நித்தியத்தில் நாம் இணையும் வரை
நித்தமும் நினைத்திடுவோம்.

இல. 43, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்

(CS 21846) (3/6)

## மரண அறிவித்தல்



பிறப்பு :- 10.03.1927 | இறப்பு:- 24.11.2022

**திருமதி. நாகரத்தினம் பொன்னையா**


கொக்குவில் புதுக்கோவிலடியை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் அவர்கள் தனது 95வது வயதில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா சின்னத்தங்கச்சியின் மகளும். சின்னப்பு சின்னத்தங்கத்தின் மருமகளும். கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பு பொன்னையாவின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் (ஆசைப்பிள்ளை) பண்டிதை அமிர்தவல்லி அம்மா அவர்களின் சகோதரியும். நாகேஸ்வரி. சிவகாமி. பொன்னம்பலம். கந்தையா ஆகியோரின் மைத்துனியும். மனோரஞ்சிதம். மனோமோகனஜோதி. மனோரமா ஆகியோரின் அன்புத் தாயாரும். பரம்சோதி. மனோகரன். ரஞ்சன் அவர்களின் அன்பு மாமியாரும். பிரவீனா ஸ்ரீகனேசன். கஸ்தூரி. அவர்களின் அன்பு பேத்தியும் அக்ஷயாவின் அன்பு பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. 11.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகி 1.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

தகவல்: குடும்பத்தினர் — 0770648387 / 0767011063

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்
17 . 02 . 1944

மறைவு
07 . 12 . 2021

## அமரர் சங்கரப்பிள்ளை செல்வராசா

(ஓய்வுபெற்ற பதில் பிரதேச செயலர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

**திதி : கார்த்திகை வளர்பிறை திருதியை**

ஓராண்டு கடந்து போனாலும்
ஒரு யுகமே ஓடி முடிந்தாலும்
ஓயவில்லை கண்கள் மட்டும்
ஒவ்வொரு நாளும் நீர் சொரிந்து
ஆலமரம் சாய்ந்தாலும்
அடி விழுது தழைத்தோங்கும் போல்
அப்பா நீ பிரிந்தாலும் - உன்
விழுதாய் நாம் வளர்வோம்
உருவமாய் காத்த நீ - அருவமாய்க்
காப்பாய் என ஆண்டவன் கழல்
கூட ஓராண்டு தவிர்த்திருந்தோம்
அம்மா இறந்த பின் அருகிலிருந்தாய்
ஒரு தூணாய் உந்தன் நிழல் தனில்
எப்போதும் நாம் வளர்வோம் பெருந்தூணாய்

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

"அன்பகம்"
இணுவில் கிழக்கு, இணுவில்

குடும்பத்தினர்

(CS 47830) (3/6)

# நன்றி நவிலல்



பிறப்பு
24 . 08 . 1925

இறப்பு
21 . 11 . 2022

எமது தந்தை

## நீலையினார் மனோகரன்


(ஓய்வுபெற்ற அதிபர், யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, யா/மட்டுவில் மகா வித்தியாலயம்)

அவர்களின் இறுதிக்கரியைகளில் பங்கேற்றோர். அனுதாப செய்திகளை அனுப்பிவைத்தோர் மற்றும் இறுதிக்கிரியைகளை செவ்வனே செய்த சைவக் குருக்கள் முருகதாஸ் அவர்களுக்கும். எமது தந்தை நியூசிலாந்தில் இருந்து நாடு திரும்பிய ஆண்டு முதல் (2010) இன்று வரையும் முதுமையின் சவால்களை வெல்ல மருத்துவ ஆலோசனைகள். சிகிச்சைகள் செய்து உதவிய Dr.S.மகாதேவன். Dr.S பிரசன்னா மற்றும் ஆரம்பகாலத்தில் Dr.N.தரணீதரன். Dr.T.ஸ்ரீகரன் அவர்களுக்கும். மொடேர்ண் நியூ மெடிகெயர் சாவகச்சேரி நிறுவனத்தினர்க்கும் அனைத்து நிலைமைகளிலும் எமக்கு உதவிய எமது நெருங்கிய உறவினர்க்கும். உறவினரான அம்பிகா டிஸ்பென்சரி உரிமையாளர் நா.சிவபாலன் (சிவா அண்ணா) அவர்களுக்கும். எமது தந்தையின் இறுதி வாரங்களில் நேரில் எமது இல்லம் வந்து மருத்துவ சிகிச்சை வழங்கிய Dr.R.அஜந்தன் அவர்களுக்கும். லஷ்மிதா நடமாடும் ஆய்வுகூட நிறுவனத்தினர்க்கும். இறுதி நிகழ்வுக்களை நேரலை செய்து உதவிய Live Studios நிறுவனத்தினர்க்கும். தேவராசா அந்திமகால சேவை நிலைத்தினருக்கும் (சாவகச்சேரி) எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மகன்கள்: ம.உமாஹரன் - 0064 2113 89403**
**ம.சிவாஹரன் - 071 977 7514**

(cs.47839) (2.6)

# மரண அறிவித்தல்



## மயில்வாகனம் சத்தியபாலன்

காலஞ்சென்றவர்களான புலோலி புங்கடி மயில்வாகனம் சுன்னாகம் மயிலணி சுந்தரம் ஆகியோரின் இளைய மகனான மயிலணி சுன்னாகம் சத்தியபாலன் அவர்கள் புதன்கிழமை காலமானார்.

இவர் கமலாதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான புத்தூர் தம்பி நடராசா சிவகாமி ஆகியோரின் மூத்த மருமகனும், கோசலா (இலண்டன்), ஸ்ரீகுகன் (கனடா), வாசுகி (மயிலணி), மயூரன் (சிட்னி), முகுந்தன் (மெல்பேர்ண்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேந்திரம், பிரபாதேவி, துரைராஜசிங்கம், சாந்தி, திருமகள் ஆகியோரின் அன்பு மாமனாரும், சத்தியன்-காயத்திரி, வித்தியா-மயூரன், சிந்து-ஜரொட், மனூரி, துவாரகா-மயூரன், தர்சிகா-நிரோஜன், சாம்பவி-ஜங்கரன், சிவகாமி, பாலாஜி, கோபிகா, கோஷிகன் ஆகியோரின் பிரியமிகு பேரனும், அமிர்தா, அமரா, ஜலா, முத்து, கைல், ஸேஜ், கிரிசா, விசாகா, தேஜஸ்வி, அபிலாஷினி ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற புலோலி புங்கடி சத்தியமூர்த்தியின் தம்பியும், பரமேஸ்வரி, சத்தியமூர்த்தியின் (நியுஸிலாந்து) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27.11.2022 ஞாயிறு காலை பத்துமணிக்கு அவரது மயிலணி இல்லத்தில் நடைபெற்று, பின் பூதவுடல் தகனத்துக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 21971) (3/6)

# மரண அறிவித்தல்



மண்ணில்
27 - 08 - 1936

விண்ணில்
24 - 11 - 2022

## சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள் சரவணபவசர்மா

(ஓய்வுநிலை ஆசிரியர், முன்னாள் வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் அர்ச்சகர்)

உத்தரகோச மங்கை வழித்தோன்றலும் காரைநகரை பிறப்பிடமாகவும் கொழும் புத்துறை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ மங்களேஸ்வரக்குருக்கள் ச்ரவணபவசர்மா கடந்த (24.11.2022) வியாழக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் (தியாகராஜாக் குருக்கள்), புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் புதல்வனும், கொழும்புத்துறை மேற்கு பிரம்மஸ்ரீ தி. ச. தியாகராஜா ஐயர் - ராஜராஜேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சியாமளாதேவியின் அன்புக் கணவரும், கிருபாகரன் (கனடா), கேசவக்குருக்கள் (வவுனியா) ராஜசேகரக்குருக்கள் (கொழும்புத்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேமமாலினி, சுபத்திராதேவி, வாகீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷாந்தன், ஆரணி, சுதாகரன், சுதர்ஷசன், வைகரி, வர்னேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

17, விதானை வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

077 869 6945
077 615 2063

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS 47838) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி ஊக்குவிப்புக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 26
தெல்லிப்பழை குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், கல்வி ஊக்குவிப்பு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
குரும்பசிட்டி ஆ.சி.நடராசாவின் 11 ஆவது சிரார்த்த தினமான எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.
குரும்பசிட்டியை சொந்த இடமாகக் கொண்ட யாழ்.மாவட்டத்துக்குள் வசிக்கும் மாணவர்கள், 2020 ஆம் ஆண்டுக்குப்பின் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள், 2020 ஆம் ஆண்டுக்குப்பின் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இரசாயனவியல், பௌதீகவியல் பாடங்களில் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்கள், 2020 ஆம் ஆண்டு க.பொத. உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்திபெற்ற மாணவர்கள், 2020 ஆம் ஆண்டு க.பொத. சாதாரண தரப் பரீட்சையில் 8 ஏ சித்திபெற்ற மாணவர்கள், கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் ஆகியோர் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பாடசாலை அதிபரின் பரிந்துரை, அத்தாட்சிக் கடிதங்களுடன் தலைவர் அல்லது செயலாளர், குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச்சங்கம் என்ற முகவரிக்கு கடிதம் மூலமோ அன்றி நேரடியாகவோ விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-14)

## ஹெரோய்னுடன் கைது; இளைஞருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், நவ. 26
இளவாலைப் பகுதியில் உயிர் கொல்லி ஹெரோய்னுடன் கைதான இளைஞருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இளவாலை சந்தியில் உயிர் கொல்லி ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், அதேயிடத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞரை கடந்த 18 ஆம் திகதி இளவாலைப் பொலிஸார் கைது செய்தனர். இளைஞரிடமிருந்து 120 மில்லிகிராம் உயிர் கொல்லிஹெரோய்ன்பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.
இதனையடுத்து இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 19 ஆம் திகதி இளைஞர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.
இதன்போதே எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14,125)

# சிறுவிற்பனையாளர்களுக்கு கடனடிப்படையில் சிலிண்டர்

*லிட்ரோ அறிவிப்பு*

**கொழும்பு, நவ. 26**
**நாடளாவிய ரீதியில் எரிவாயு சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதையடுத்து சிறுவிற்பனையாளர்களுக்கு கடன் அடிப்படையில் சிலிண்டர்களை வழங்குமாறு விநியோகஸ்தர்களுக்கு லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.**

பெரும்பாலான விநியோகஸ்தர்கள் எரிவாயு சிலிண்டர்களை விற்பனையாளர்களுக்கு கடனுக்கு வழங்குவதில்லை. பணம் கொடுத்தால் மாத்திரமே சிலிண்டர்கள் வழங்கப்படுகின்றன.
இதனால் சிறுவிற்பனையாளர்கள் பலர் எரிவாயுவை கொள்வனவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே சிறு விற்பனையாளர்களுக்கு விநியோகஸ்தர்கள் கடன் அடிப்படையில் சிலிண்டர்களை வழங்குவது அவற்றுக்குத் தீர்வாக அமையும் என லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 26
மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலைய சிறுவர் தின நிகழ்வுகள், சனசமூக நிலையத் தலைவர் சி.அமிர்த லிங்கம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் தொண்டு நாத சுவாமிகள் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (ஒ-14,இ)



யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் தூய அழகிய நகர திட்டத்தில் கொழும்புத்துறை இலந்தைக் குளத்தின் ஆரம்ப புனரமைப்புப் பணிகள் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டன. (ஒ-14,20)

## பொலிஸ் அலுவலர் மீது மதுபோதையில் தாக்குதல்: சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ. 26
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பிளான் பகுதியில் வைத்து பொலிஸ் உத்திகயோத்தர் மற்றும் அவரது மைத்துனர் ஆகியோர் மீது மதுபோதையில் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அண்மையில் யாழ்ப்பாணம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
கடந்த 21ஆம் திகதி அதிகாலை சிவில் உடையில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் அவரது மைத்துனர் ஆகியோர் வீதியால் சென்று கொண்டிருந்தபோது மதுபோதையில் வந்த இருவர் வழிமறித்து அவர்களைத் தாக்கினர். இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
தாக்குதல் நடத்திய குப்பிளான் தெற்கு பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 29 வயதான இரு சந்தேகநபர்களையும் பொலிஸார் கைதுசெய்து யாழ். நீதிமன்றில் முற்படுத்தினர்.
அவர்களின் வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மீள எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர்வரும் 29 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

## கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 26
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக் கட்டுவன் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 780 மில்லிலீற்றர் கசிப்பும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.
இதனையடுத்து சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று சுன்னாகம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-14,125)

## கருங்குளவி தாக்கி முதியவர் காயம்!

சாவகச்சேரி, நவ .26
சாவகச்சேரிப் பகுதியில் கருங்குளவி தாக்கியதில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார். சாவகச்சேரி சந்தைக்கு சைக்கிளில் சென்ற 66 வயதான முதியவரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கருங் குளவிகள் தாக்கியுள்ளன . இதன்போது கடுமையாகப் பாதிக்கப்பட்ட முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ-14,9)

## போதைத்தடுப்பு விழிப்புணர்வும் தலைமைத்துவப் பயிற்சியும்

யாழ்ப்பாணம், நவ. 26
யாழ்.மாவட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வும் தலைமைத்துவப் பயிற்சியும் கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் அண்மையில் இடம்பெற்றது.
நாவாந்துறை சிறுவர் விடியல் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் திருமதி வினோதினி சிறிமேனன் கலந்து கொண்டார். இதன்போது போதைப்பொருள் பாவனைக்கெதிரான விழிப்புணர்வு கருத்துரைகளும் தலைமைத்துவப் பயிற்சியும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.
சர்வதேச சிறுவர் பணியக நிர்வாக இயக்குநர் திருமதி சு.அனுசா, மருத்துவர் ப.நிர்மலன் மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-125)

# மின்கட்டண நிலுவை அமைச்சர் தலையீடு

*நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை*

கொழும்பு, நவ. 26
கொழும்பு -7 இல் அமைந்துள்ள வீடொன்றில் மிகப்பெருந்தொகை மின்கட்டணம் நிலுவையில் உள்ளது. இதற்கு முன்னாள் அமைச்சர் ஒருவர் செல்வாக்கு செலுத்துகிறார் என கிடைக்கப்பெற்ற முறைப்பாடுக்கமைய உடன் விசாரணை நடத்தப்படும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க எச்சரித்துள்ளார். கொழும்பு -7 இல் அமைந்துள்ள வீடொன்றில் மிகப் பெருந்தொகை மின்கட்டணம் நிலுவை யிலுள்ளமை குறித்து பலமுறை தெரிவித்தும், கட்டணம் செலுத்தப்படவில்லை.
அதற்கமைய மின்சாரத்தைத் து[illegible]க்க மின்சாரசபை ஊழியர்களால் [illegible]த்த வீட்டுக்கு சென்றபோது வீடு பூ[illegible]யே காணப்படுகிறது எனவும் இதற்[illegible] னாள் அமைச்சர் ஒருவர் செல்[illegible] செலுத்துகிறார் எனவும் முறை[illegible]டு அளிக்கப்பட்டுள்ளது- என்றார். ([illegible]இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையான மாணவர்களை பாடசாலைகளில் இருந்து இடைநீக்காதீர்

## போதைத் தடுப்புக் கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 26

மாணவன் ஒருவன் போதைப்பொருள் பாவனையாளனாகவோ அல்லது அதற்கு அடிமையானவனாகவோ இனங்காணப்பட்டால், அவனை பாடசாலையில் இருந்து இடைநீக்கக்கூடாது. இதனால், குறித்த மாணவனிடத்தில் போதைப்பழக்கம் அதிகரிக்குமே தவிர குறையாது- இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்டமருத்துவ அதிகாரி மருத்துவர் பிரணவன்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற போதைப்பாவனைத் தடுப்புக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப் பாவனையாளனாக மாணவன் ஒருவன் அவதானிக்கப்பட்டால் அவனை பாடசாலையிலிருந்து ஒதுக்கிவைக்கும் அல்லது வீட்டுக்கு அனுப்பும் போக்கை பாடசாலைகள் கைவிட வேண்டும். அந்த மாணவனை உரிய பொறிமுறைகளின் கீழ் மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பும் கலாசாரத்தை கொள்கையாக பாடசாலைகள் கடைக்கொள்ள வேண்டும். மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இதர அமைப்புகளும் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

முன்பெல்லாம் ஆயிரம் ரூபாவுக்கு பெறக்கூடியதாக இருந்த ஹெரோய்னை இப்போது 3 ஆயிரம் ரூபாவுக்கே பெறமுடிகின்றதாக அறியக் கிடைக்கின்றது. போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு விற்பனையாளர்கள் கைதுசெய்யப்பட்டால் ஹெரோய்ன் விலை இன்னும் அதிகரிக்கும். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம் - என்றார்.

(அ-ம-26)

# போதைப்பொருள்களுக்கு எதிரான போரில் கல்வித் திணைக்களம் இணைய வேண்டும்

## போதைத் தடுப்புக் கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு கல்வித் திணைக்களம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதில்லை. இந்த நிலைமை முற்றாக மாற்றம்பெற வேண்டும். அனைவரும் இணைந்தாலேயே இந்தப் போரில் வெற்றிபெறலாம். இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பில் சாவகச்சேரி மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் அ.வினோதா மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட காலமாக போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பல கூட்டங்கள் இடம்பெறுகின்ற போதிலும், அந்தக் கூட்டங்களுக்கு கல்வித் திணைக்கள அதிகாரிகள் வருவதில்லை. அதேபோல் பாடசாலைகளில் இருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன. ஆனால், அந்த முறைப்பாடுகளுக்குரிய நடவடிக்கைகளை கல்வித் திணைக்களத்தினர் மேற்கொள்வதில்லை. அதுமட்டுமன்றி போதைப்பொருள் தொடர்பில் பாடசாலை மட்டங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு கல்வித் திணைக்களத்தினர் தடையாக உள்ளனர் என்றும் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்- என்றார்.

(அ-ம-26)

# உபகரணங்கள் வழங்கல்

இணுவில் பொது நூலகத்தின் கனடா அமைப்புக்குழுவின் நிதி அனுசரணை யுடன் நடைபெற்றுவரும் சமூக நலத்திட்டத்தின் 4 ஆம் கட்ட நிகழ்வு, இணுவில் பொதுநூலக கலாசார மண்டப முன்றலில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பயனாளர்களுக்கு கோழி வளர்ப்பதற்கான உதவி, தையல் இயந்திரம், தச்சு வேலைக்கான உபகரணம், அலங்கார வளைவுக்கான



உபகரணம், திருநெறிய தமிழ்மறைக் கழக மாணவர்களுக்கு கொடுப்பனவு ஆகியன வழங்கப்பட்டன.

(ஒ-14)

### சா/த பெறுபேறுகள்...

மேற்படி பெறுபேறுகள் வெளியாகுவது தொடர்பில் கடந்த சில வாரங்களாகவே முன்பின் முரணான கருத்துக்களும் இழுபறி நிலைகளும் இருந்துவந்த நிலையில், நேற்று மாலை பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk மற்றும் www.doenets.lk என்ற இணையத்தளங்களில் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

(அ-ம)

### கேணியடிப்...

மொன்று இடம்பெற்றது. எனவே அதிகாரிகள் இது தொடர்பில் கூடுதல் கவனமெடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பொலிஸாரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

(அ-ம-20)


# மரண அறிவித்தல்



## திரு.செல்லத்துரை ஞானகணேசன்(R.M.B)

**(இளைப்பாறிய ஆயுர்வேத வைத்தியர்)**

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஞானகணேசன் நேற்று (25.11.2022) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரஞ்சிதத்தின் (பட்டு) அன்புக் கணவரும், ஜெயமுகன் (லண்டன்), ஜெயகௌரி (ஆசிரியை), ஜெயசுபாசினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புக்குரிய தந்தையும், ஜெனிதா (U.K), ஈசன் (யாழ்.மாநகர பிரதி முதல்வர்), சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுக்சன், டனுக்சன், அக்சயா, அபிநயா, துவாதியா, தீனரீசன், டோலினா, நயாரா ஆகியோரின் அன்புக்குரிய பேரனும், கமலாதேவி, காலஞ்சென்ற ஞானசேகரம்பிள்ளை, காலஞ்சென்ற பாலகணேசன் மற்றும் ஆனந்தகணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21981) 1/6



# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 11 . 1936



இறப்பு 24 . 11 . 2022

## ஆறுமுகம் இரத்தினசபாபதி

சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இரத்தினசபாபதி அவர்கள் கடந்த (24.11.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற தங்கமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, முத்துப்பிள்ளை, சிதம்பரநாயகி மற்றும் சுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, மூத்ததம்பி, கார்த்திகேசு, பூமலர், சரஸ்வதி, செல்வரத்தினம், தவமலர் மற்றும் மனோரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனரும், தயாளினி (சுவிஸ்), மாலினி (சுவிஸ்), முருகையா (சுவிஸ்), ஜெயாளினி (சுவிஸ்), லக்ஸ்சிகா (முகாமைத்துவசேவை உத்தியோகத்தர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருச்செந்தூர்நாதன், காலஞ்சென்ற உமாமகேஸ்வரன், இந்துஜா, பகீரதன், கமலக்குமரன் (ஆசிரியர், இடைக்காடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திலக்ஷன், திவாகரன், விக்கினேஸ்வரன், ஆகேஷ், அஜய், சகானன், கஜன், லவின், அபினாஸ், அப்சரன், ஆருக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 38550) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருந்துகிறோம்

நேற்றைய உதயன் முன்பக்கச் செய்தியொன்றில், சட்டவிரோதப் படகுப்பயணம் என்பதைக் குறிக்க பயன்படுத்தப்பட்ட 'கள்ளத்தோணி' என்ற சொற்பதம் எவரையும் மனம்புண்படுத்தியிருந்தால், அதற்காக உதயன் தன் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறான். (ஆ-ர்)





# மாவீரர்களின் பெற்றோர் நேற்றுக் கௌரவிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 26

தமிழர் தாயகத்துக்காக வித்துடலாகிய மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு வட்டுக்கோட்டை தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

முன்னாள் போராளி செழியன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தி குறித்த நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வின் போது மாவீரர்களது நினைவுரைகள் இடம்பெற்றன. பின்னர் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (அ-ம-27)

### சமஷ்டி...

தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்றும், எதிர்வரும் சுதந்திர தினத்துக்குள் அந்தத் தீர்வு வழங்கப்பட்டு 'ஒரு தாய் மக்களாக' இலங்கையர்கள் சுதந்திரதினத்தைக் கொண்டாடுவார்கள் என்றும் ஜனாதிபதி மீண்டும் மீண்டும் தெரிவித்துவரும் நிலையில், தீர்வை நோக்கிய பயணத்தில் ஜனாதிபதியிடம் என்னென்ன விடயங்களை வலியுறுத்துவது என்பது தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்றுக் கூடினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், எஸ்.வினோநோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மூன்று முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும், அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்தி மாகாணசபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்ட வேண்டும், உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வை வழங்கும் வகையில், புது அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று நேற்று எடுத்துள்ளன. இந்தத் தீர்மானங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் திட்டவட்ட முடிவுகளாக ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது வலியுறுத்தப்படும்.

இதேவேளை- ஜனாதிபதியுடனான பேச்சு நடைபெறும் வரையில் இடையிடையே 'தமிழர்களுக்கான அரசியல் தீர்வு' தொடர்பில் ஒன்றுகூடி மேலதிக தீர்மானங்களை மேற்கொள்வது என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன. இதனடிப்படையில் இரண்டாவது கூட்டம் அடுத்தவாரம் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவருக்கு அழைப்பு விடுக்கப்படாததால்தான் அவர் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சிகளை பேச்சுக்கு அழைக்கும் பொறுப்பு மாவைக்கு வழங்கப்பட்டதால், 'கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு ஏன் அழைப்பு விடுக்கப்படவில்லை?' என்று ஏற்பாட்டாளர் மாவை சேனாதிராசாவிடம் கூட்டத்தின்போது வினவப்பட்டது. அத்துடன், அடுத்தகூட்டத்தில் கஜேந்திரகுமாரை முறைப்படி அழைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-22)

### கரைச்சி...

கரைச்சி பிரதேசசபையின் அமர்வு அதன் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்விலேயே மாவீரர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. சபையின் நடுவே வைக்கப்பட்டிருந்த பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து உறுப்பினர்களும் தீபமேற்றி அஞ்சலி செலுத்தினார்கள். (அ-ம-113)

### கூட்டத்துக்கு...

உறுப்பினர்கள் செயற்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் நேற்றைய சந்திப்பின்போது, கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவேண்டும் என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எனினும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கலையரசன், சாள்ஸ், சாணக்கியன் ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. (அ-ம-22)

### உயிரிழந்தவரின்...

மனைவி உருக்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 303 இலங்கையர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் ஏதிலியொருவர் தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கல்வயலைச் சேர்ந்த நபரே இவ்வாறு உயிரிழந்தார். இந்த நிலையிலேயே குறித்த நபரின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டு வருமாறு அவருடைய மனைவி இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

எனது கணவனின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு 30 லட்சம் ரூபா தேவைப்படும் என்று என்னிடம் கையொப்பம் கேட்டனர். அந்த 30 லட்சம் இருக்குமாயின் நான் ஏன் என்னுடைய கணவரை கடல் கடந்து அனுப்ப வேண்டும்? நான்கு பிள்ளைகளையும் வளர்க்கவேண்டும். கடன் பிரச்சினைகளும் இருக்கின்றன. அவற்றிலிருந்து மீள வேண்டும் என்பதற்காகவே என்னுடைய கணவர் சென்றார். இப்படி நடக்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. கடைசியாக நான் அரசாங்கத்திடம் விடுக்கும் கோரிக்கை, அப்பா இல்லை என்பதை எனது குழந்தைகளுக்கு காட்டுவதற்காக அவரது உடலை எம்மிடம் கொண்டு வந்து சேர்த்துவிடுங்கள் என்பதே. எனது கணவனின் உடலை எடுத்துவர தமிழ் அரசியல்வாதிகள், புலம்பெயர் தமிழர்கள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். (அ-ம-27)

### நகை..

முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேகநபரொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 35 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று வல்வெட்டித்துறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-26)

### 40 பிடியாணைகளில்...

செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி நிஹால் பிரான்ஸிஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர்கள் பிரதீப், மேனன் மற்றும் கொன்ஸ்டபிள்களான கவியரசன், புவனச்சந்திரன், சுயந்தன், சம்பத், அரஹம், அசாத், யோசப், பிரவீன், கரன், வர்ணகுலசூரிய ஆகியோரைக் கொண்ட குழுவே இந்தச் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் பெண்கள் மற்றும் வயோதிபர்களை இலக்கு வைத்து கத்தியைக்காட்டி அச்சுறுத்திச் சங்கிலி அறுக்கும் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. இது தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவாகியிருந்த நிலையில், சந்தேகநபர்கள் கைது செய்யப்படவில்லை. அதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன் அடிப்படையிலேயே மேற்படி 42 மற்றும் 43 வயதான இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து வழிப்பறிக்காகப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், 3 தங்கச் சங்கிலிகள் என்பன மீட்கப்பட்டன. சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அடிப்படையில் நகைக்கடை உரிமையாளர், பெண்ணொருவர் என மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-26)

### தலைவர்...

வத்தினரதும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தை சமூக வலைத்தளங்களில் கொண்டாடியோர், ஒளிப்படங்களையும் காணொலிகளையும் பதிவிட்டோர் கடந்த காலங்களில் பொலிஸாரால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### கிழக்கின்...

குடும்பம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த துயிலுமில்லத்தில் மாவீரர் தினத்தில் கிழக்கு மாகாண மாவீரர்களை நினைவுகூருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நிகழ்வில் கிழக்கு மாகாணத்திலிருந்து மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் செல்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை அம்பாறையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பேருந்துச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து நினைவேந்தலுக்கு வரவிரும்பும் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் 0754346668 என்னும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ-ம-7)

### குருதிக்கொடைக்கு...

மேற்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாவீரர் வாரமென்பதால், இந்தக் குருதிக்கொடை நிகழ்வுகள் மாவீரர்களை அஞ்சலிக்கும் வகையிலானது என்ற கோணத்திலேயே பொலிஸாரினதும் புலனாய்வாளர்களினதும் அச்சுறுத்தல்கள் அமைகின்றன என்று இளைஞர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் இளைஞர்கள் இணைந்து குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்த நிலையில் அந்த நிகழ்விலும் பொலிஸாரின் பிரசன்னம் இருந்துள்ளது. குருதிக்கொடைக்கு வந்த இளைஞர்களை புலனாய்வாளர்கள் ஒளிப்படம் எடுத்து மிரட்டியுள்ளனர் என்றும் மேலும் தெரியவருகின்றது. (அ-ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமத்துவக் கட்சியால் மாவீரர்களுக்கு அஞ்சலி




கிளிநொச்சி, நவ. 26
கிளிநொச்சியில் அமைந்துள்ள சமத்துவக்கட்சி அலுவலகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள், கட்சியின் அலுவலகத்தில் முன்னாள் அரசியற்துறைப் போராளி வேங்கை தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் உறவினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டு சுடர்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (ஒ-14,214)




# யாழ். சுப்பர்மடத்திலும் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 26
யாழ்ப்பாணம் சுப்பர்மடம் பொதுநோக்கு மண்டபத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.
மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களால் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்படுகின்றது.
அத்துடன் மாவீரர் நினைவேந்தலின் இறுதி நாளான எதிர்வரும் 27ஆம் திகதி உணர்வெழுச்சியுடன் மாவீரர்களை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகளையும் ஏற்பாட்டாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,20)

# உடையார்கட்டுப் பகுதியில் மனித எச்சங்கள் மீட்பு!

முல்லைத்தீவு, நவ. 26
புதுக்குடியிருப்புஉடையார்கட்டு தெற்கு அம்மன் கோயிலுக்குப் பின்புறம் உள்ள காணியொன்றில் மனித எச்சங்கள் அடங்கிய உரப்பை ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டது.
காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்த காணி உரிமையாளர், பலா மரத்தை வெட்ட மண்ணைத் தோண்டியபோது மூன்றடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் உரப்பை ஒன்றை அவதானித்தார். அதன்பின்னர் உரப்பையை மீட்டுத் திறந்து பார்த்தபோது அதற்குள் மனித எலும்புத் துண்டுகள் காணப்பட்டன.
அதனையடுத்து காணி உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், உரப்பையில் மண்டை ஓடு மற்றும் எலும்புகள் இருந்ததைக் கண்டு பிடித்தனர். யுத்த காலத்தில் உயிரிழந்த ஏதேனும் ஒரு தரப்பினருடைய எலும்புக்கூடாக அவை இருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,இ)

# காரைநகர் பிரதேசசபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ. 26
மாவீரர் வாரத்தின் மூன்றாவது நாளான கடந்த புதன்கிழமை காரைநகர் பிரதேச சபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
காரைநகர் பிரதேசசபையின் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தலைமையில் சபை உறுப்பினர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் இரு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உயிர் நீத்த உறவுகளுக்கு ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ஒ-14,125)

# 'கார்கில்ஸ்' நலன்பேண் திட்டத்தில் பயனாளர்களுக்கு புலமைப்பரிசில்



யாழ்ப்பாணம், நவ. 26
'கார்கில்ஸ்' நிறுவனத்தின் விவசாயிகளின் நலன் பேணும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட 74 பயனாளிகளுக்கு நேற்று வெள்ளிக்கிழமை புலமைப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.
கார்கில்ஸ் நிறுவனம் வருடந்தோறும் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் நலன் பேணும் திட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட சமூக வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.
இந்த வருடம் சுமார் 3 மில்லியன் ரூபா நிதியீட்டத்தில் யாழ்.- கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயக் குடும்பங்களின் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைக்காகவும், பால் உற்பத்தி மற்றும் கால்நடை பண்ணையாளர்களின் தொழில் மேம்பாட்டுக்காகவும் 'கார்கில்ஸ்' நிறுவனம் புலமைப்பரிசில் தொகையைக் கையளித்தது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் க. மகேசன் மற்றும் கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், வடக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், கார்கில்ஸ் நிறுவனத்தின் வடக்கு யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர்கள் விரிவாக்கம் பிரிவு முகாமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச)

# தமிழ் விழா

சாவகச்சேரி, நவ. 26
தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தமிழ்மொழித் தின விழா, இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது
தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களத் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வ. வசந்த குமார் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-14,159)

**விற்பனை உதவியாளர்தேவை (பெண்கள்)**
நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் பெண்கள் வேலைக்குத் தேவை.
Note:- யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**076 166 1986**

**இரசாயனவியல் (Chemistry)**
பிரபல பாடசாலையில் கற்பிக்கும் மிக நீண்ட காலமாக இரசாயனவியல் கற்பித்தலில் அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியரினால் தனி, குழு மற்றும் Online வகுப்புகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் 2024 A/L மாணவர்களுக்காக ஆரம்பமாகின்றது.
தொடர்புகளுக்கு:- **076 7781 442**

**உண்டு**
கோப்பாய் இராசபாதை சந்தியில் இருந்து 100m தூரத்தில் பத்துப் பரப்பு தோட்டக் காணி விற்பனைக் உண்டு.
(cs 47820)(2/6)
**077 321 8675**

**PHYSICS**
**A/L 2024**
குழு, தனி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
யாழ். - பிறவுன் வீதி.
இணுவில் - கந்தசாமி கோவில் அருகில்.
அளவெட்டி - மாகியப்பிட்டி.
T.u Jinthu - **076 6034 895**

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு.
- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-
- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.
தொடர்பு:- ஜெயம்
**077 814 7389**
**077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.